இருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற் கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பி யாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) எமது ஒழுங்கமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் குறைந்த வருமானத்தைப் பெறுவோர் உள்ளிட்ட பொதுமக்களின் கல்வி ரீதியானதும் பொருளாதார, மதரீதியான, கலாசார, சமூக தேவைப்பாடுகள் வளர்ச்சிபெறவும், அனர்த்த நிலைமைகளின் போது நடவடிக்கைகளில் ஈடுபடவும், உறுப்பினர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் நிறை வான வளர்ச்சி பற்றிய உணர்ச்சியை உண்டாக்கி அதன் மூலம் எதிர்பார்க்கும் பிரதிபலன்களை எய்துதலும்;

(ஆ) மதரீதியான அபிவிருத்தி மற்றும் ஆட்களின் அபிவிருத்தி கருதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

(இ) கல்வி அபிவிருத்திக்கான காரணிகளை நடைமுறைப் படுத்தும் செயற்பாடுகளை மேலோங்கச் செய்தல்;

(ஈ) பண்பட்ட குணம் மற்றும் விழுமியங்களை மேம்படுத்தல்;

(உ) பாடசாலைப் பிள்ளைகள், பிரிவேனாக்களில் பயிலும் மாணவ தேரர்கள் மற்றும் பெரியோரின் சிங்கள, தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுடன் ஏனைய மொழிகள், கணனி உள்ளிட்ட தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தல்;

(ஊ) மதரீதியானதும் கலாசார ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்;

